ஞாயிற்றுக்கிழமை இயக்குவது குறித்து முடிவெடுக்கவில்லை:

# இரவு 9 மணி வரை மெட்ரோ ரெயில் சேவை

சென்னை, ஏப்.20-

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தமிழக அரசு இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் இரவு ஊரடங்கை அறிவித்து உள்ளது. மெட்ரோ ரெயில் சேவைகள் திங்கள் முதல் சனிக்கிழமை வரையிலான அனைத்து வேலை நாட்களிலும் காலை 5.30 மணி முதல் இரவு 11 மணி வரை இயக்கப்படும்.

ஆனால் தற்போது இரவு ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் இரவு 9 மணி உடன் சேவை நிறைவு செய்யப்படுகிறது. அலுவலக நேரங்களில் 5 நிமிடங்களுக்கு ஒரு ரெயிலும், அலுவலக நேரம் அல்லாத நேரங்களில் 10 நிமிடங்களுக்கு ஒரு ரெயிலும் இயக்கப்படுவதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையம், பரங்கிமலை மெட்ரோ ரெயில் நிலையம் மற்றும் விம்கோ நகர் மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து கடைசி மெட்ரோ ரெயில் இரவு 8.55 மணி மற்றும் இரவு 9.05 மணிக்கு புறப்பட்டு 9,50 மணிக்கு செல்ல வேண்டிய முனையங்களை சென்றடையும்.

ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு என்பதால் அந்த நாளில் ரெயில் இயக்குவது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

மேற்கண்ட தகவல்களை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.